# ஆற்றுப்படை நூல்களில் யாழ்

**முனைவர் த. தட்சணாமூர்த்தி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதி) மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

மனிதன் என்ற ஓர் இனம் உருவாவதற்கு முன்னரே இசை தோன்றி இருக்கவேண்டும் என்பது இசை ஆய்வாளர்களின் கருத்தாய் உள்ளது. இதனையே “வண்டு, பறவை, விலங்குகளிடமுள்ள இசையை பிறகு மனிதன் அறிந்து கொண்டான். எனவே மானிடன் மண்உலகில் தோன்றுவதற்கு முன்பே வண்டு, பறவை, விலங்குகளிடம் பண் தோண்றி இருந்தது” என ஆய்வாளர் நா. மம்மது குறிப்பிடுகிறார். உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூவகைப் பாகுபாடுகளை உடையதாய் இன்றும் மிளிர்கிறது. இசை என்பது ஓசையின் தன்மை, அவ்வோசை எழுப்பப்படும் பொருள், அதன் வடிவம், சூழல் என பல்வேறு தன்மைகளைக் கொண்டு கேட்பவர்களுக்கு ஒருவிதமான மனத் தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது. அவை தோற்கருவி, நரம்புக்கருவி, காற்றுக் கருவி போன்ற வடிவங்களில் பயன்பாட்டில் இருந்துவருகிறது. தமிழ் மொழியின் பழங்கால இலக்கியங்கள், இசைக் கருவிகள் பற்றிய நுண்ணிய செய்திகளை குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஆற்றுப்படையில் இடம்பெறும் யாழ்அமைப்பு, யாழிசையின் சிறப்பு, உவமை பற்றி எடுத்துரைக்கும் விதத்தில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## பத்துப்பாட்டு

சங்க இலக்கியம் பாட்டும் தொகையுமாக தொகுக்கப்பட்டது. இவ்விரண்டிலும் இசை பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. ‘பாட்டு’ என்று சிறப்பித்துக் கூறப்படுவது பத்துப்பாட்டாகும். சங்ககாலக் கலைஞர்கள் பாணர், பாடினி, கூத்தர், விறலியர், பொருநர் என்று இலக்கியங்களில் சுட்டப்படுகின்றனர். பாணர்களில் யாழ்ப்பாணர், இசைப் பாணர், மண்டைப்பாணர் என்ற பாகுபாடு உண்டு. அவர்களுள் யாழ்ப்பாணர்களில் அவர்கள் வைத்திருக்கும் யாழின் அமைப்பு கொண்டு சிறுபாணர்/ பெரும்பாணர் என அழைக்கும் வழக்கம் பழங்காலத்தில் இருந்தது. இக்கலைஞர்கள் மன்னர் மற்றும் வள்ளல்களை *‘பழுமரம் தேடும் பறவை போல’* நாடிச் சென்று தங்களின் வாழ்க்கையை வறுமை இன்றி அமைத்துக் கொண்டனர். அவ்வகையில் பாணர்கள் வைத்திருந்த யாழ் பற்றி ஆற்றுப்படை வெளிப்படுத்தும் கருத்துகளைக் காணலாம்.

## யாழ் செய்த முறை

குமிழ மரத்தின் உள்துளை உள்ள தண்டில் "மரல்" எனப்படும் கள்ளியின் நாரை, நரம்பாகக் கொண்டு அன்றைய யாழினைச் செய்துள்ளனர். இச்செய்தியை (பெ.பாண் 181-82) யாழுக்குரிய தெய்வம் இரண்டு (பொருநர் - 20), (பெ.பாண் - 463) இடங்களில் ஆற்றுப்படைகளில் சுட்டப்படுகிறது. அத்தெய்வம் யாதென்று அறிய முடியவில்லை.

## யாழின் அமைப்பு

யாழ் நான்குவகை உடையது. அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ். இவைபோல இன்னும் பலவும் வருவன உள என்று சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை கூறுகிறது. இவ்யாழ் நரம்புகளின் எண்ணிக்கை கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. அவை முறையே 21, 19, 14, 7 ஆகும். யாழ் இசைக்கருவிகளுள் முக்கியமான ஒன்றாகக் கருதுவதற்கான காரணம், வெவ்வேறு பொருள்களைக் கொண்டு இசை ஓசைக் கேற்றவாறு வடிவமைக்கப்பட்ட மனிதனின் நுண்ணிய அறிவுக்கூறே. தொல்காப்பியர் பறை மற்றும் யாழைக் குறிப்பிடுகிறார். வரலாற்று ஆவணங்களான சிற்பம், ஓவியம் மற்றும் அக்காலக் கருவிகளுள் சில காலங்களுக்குப் பின் இயல்பாயும் காலங்களின் பேரழிவுகளாலும் மறைந்தன. அவற்றின் உருவம் மற்றும் அவற்றின் முழுமையான தன்மையையும் இன்று முழுவதுமாய் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் நீண்டகாலப் பயன்பாட்டில் இருந்து தொகுத்து வெளியிடப்பட்ட, சங்ககாலப் பாடல்கள் மூலம் யாழின் வடிவத்தினையும், அதன் சிறப்பையும் கொண்டு இன்று நம்மால் அக்கருவியினை வடிவமைத்துக் கொள்ள முடியும்.

**பொருநராற்றுப்படை** (4-22) யாழின் வடிவத்தைப் பற்றித் தெளிவாக விளக்குகிறது. மானின் கால் குளம்பு போன்று இரண்டு புறம் தாழ்வாகவும், நடுவில் உயர்ந்த பத்தளினையும் கொண்டது. விளக்குச் சுடரின் நிறத்தில் நன்கு படர்ந்து போர்க்கப்பட்டதுமாகிய தோலினை உடையது. சிவந்தநிறமுடைய இளமகளின் இளஞ்சூலமைந்த வயிற்றின் நடுவே மெலிதாக ஒழுங்குபட்டுள்ள மயிரினது தோற்றம் போல், இரண்டு தலைப்பையும் இணைத்துத் தைத்த மரத்தை மூடுதற்கமைந்த உறையினையும் கொண்டது. நண்டின் கண்ணை ஒத்த பத்தரினையும், அதனை இணைத்தற்குத் திறந்த துளை மறைய முடுக்கின ஆணிகளையும் கொண்டது. எட்டாம் நாள் தோன்றும் திங்களின் வடிவை ஒத்துத் தோன்றுகின்ற வாயினை ஒத்தது. பாம்பு தலை எடுத்தாற் போன்ற கரிய தண்டினை உடையது. கரிய நிறமுடைய மகளின் முன்கையின் கண் அணியப்பட்ட வளையலை ஒத்து நன்கு இருக்கிய பிணிப்பினையுடைய வார்க்கட்டினை உடையது. குத்திய தினையரிசியை ஒத்த குற்றமற்ற நரம்பினையுடைய இசையின்பம் முற்றிய நரம்பினது விரித்துக்கட்டப்பட்ட தொடர்ச்சியினையும் உடைய *யாழி* (பாலை யாழ்) வடிவம் உவமை படுத்தப்பட்டுள்ளது.

**சிறுபாணாற்றுப்படை** (221-28) யாழின் அமைப்பினை விளக்குகிறது. பசுமையான கண்களை உடைய குரங்கு, பாம்பின் தலையைப் பிடித்தபோது அந்தப் பாம்பு குரங்கின் கையினை இறுக்கவும், நெகிழவும் விடுவதுபோல, அழகு பொருந்திய யாழின் தண்டில் தேவைப்படும் பொழுது நெகிழ்வுபடுத்தவும், இறுக்கமாக்கிக் கொள்வதற்கான வார்க்கட்டினையும் கொண்டது. வயிரக்கற்களை வரிசையாக வைத்தது போன்று இரண்டு தலைப்புகளையும் ஒன்று சேர்த்து இறுக்கப்பட்ட அழகான ஆணிகளையும் உடையது. பொருத்தமாக அமைக்கப்பட்ட குடம் போன்ற பின்பகுதியினையும் உடையது. குமிழம் பழத்தின் நிறமாகச் சாயம் ஏற்றப்பட்டுக் கைத்தொழிலால் வேலைப்பாடு செய்யப்பட்ட போர்வையினையும் கொண்டது. தேன் துளிர்க்கும் இனிமையைத் தன்னிடம் கொண்டு அமிர்தம் தன்னிடம் துளிர்ப்பதுபோல் நல்ல இசைதரும் முறுக்கு இலாத நரம்பினால் நடப்பட்ட இசை தரும் யாழாக உள்ளதை காட்சிப்படுத்துகிறது.

**பெரும்பாணற்றுப்படை** (4-16)யில் வரும் யாழ் வருணனையாவது, பசுமையான இலைகளை உதிர்த்து நிற்கும், பருமனான அடிமரத்தில் உள்ள பாதிரியின் வண்டுகள் மொய்க்கும் பெரிய இதழ்களை உடைய மலரைக் கிழித்தால் தோன்றும் சிவந்த உள்ளிடம் போன்ற, நிறமுடைய தோலினை உடையது. பெரிய அடிமரத்தை உடைய பாக்கு மரத்தின் அழகிய பாலையில் தோன்றிய பசுமையான பூ விரியாமல் கருக்கொண்டு இருந்ததைப் போன்று, இரண்டு பகுதியும் சேர்ந்திருக்கின்ற செறிவான துளையினை உடையது. உருக்கிச் சேர்த்தது போன்று தோல்களில் வேறுபாடு தோன்றாமல் சேர்க்கப்பட்ட தோலினைக் கொண்டது. சுனையில் நீர்வற்றிப் போய் வறண்டு காணப்படுவது போன்ற வாயினை ஒத்தது. பிறைபோல தோன்றுகின்ற கவை அமைப்புடையது. நீண்ட மூங்கில் போன்ற திரட்சியான தோள்களை உடைய பெண்களின் முன்கையில் வரிசையாக அமைந்திருக்கும் வளையல்களைப் போல விளங்கும் வார்க்கட்டினைக் கொண்டது. நீல வயிரக்கல் வரிசையாகப் பதிக்கப்பட்டது போல் விளங்கும் தண்டினையும், பொன்னால் செய்யப்பட கம்பியினைப் போன்று சிறிதும் முறுக்கு இல்லாத யாழ் வடிவம் கூறப்பட்டுள்ளது.

**மலைபடுகடாம்** (21-37) ஒரு யாழின் அமைப்பைக் கூறுகிறது. நெகிழ்விக்கவும், இறுக்கிக் கொள்ளவும் ஏற்றார் போல் இருக்கும் வளையல் போன்ற நெகிழ்வினை உடையது. ஒன்பது என்னும் எண்ணிக்கை உடைய வார்க்கட்டினையும், வெண்மை நிறமாய் சிறிய கடுகின் அளவுகூடச் சுருக்கம் இல்லாமல், நரம்பினை நன்றாக இழுத்துக்கட்டப்பட்டது. வரகுக் கதிரில் வரிசையாக இருக்கும் தானியங்களைப் போலத் துளைகள் உடையது. யாழின் ஒலி எழுப்புவதற்குக் காரணமான அகன்ற பகுதியில் பசைதடவி தோலினால் போர்த்தப்பட்டது. சிறு சிறு ஆணிகளைத் துளைகளில் வரிசையாக உடையது. யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட சிறிய கட்டையினைக் கொண்டு நரம்புகளைத் தாங்குகிற வகையில் பொருத்தப்பட்டது. புதிய பொன் நிறமான தோலினைப் போர்த்தியும், வண்டுகள் மொய்க்கும் மணம் வீசும் கூந்தல் உடைய பெண்ணின் வயிற்றில் தொடங்கி மார்பில் முடிகின்ற மயிர் வரிசைபோன்று யாழின் நடுவில் தோலை இழுத்துத் தையல் இட்டும், யாழிற்கு உள்ள அளவில் உயர்ந்து

விளங்கும் வயிற்றுப் பகுதியுடன், அரத்தினால் அராவப்பட்டுக் கங்கனியின் நிறம் கொண்ட பெரிய ஓசையினை உடைய *பேரியாழ்* என்று விளக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் யாழ் பற்றிய செய்திகளில் யாழினை இடப்பக்கம் வைத்தே வாசித்துள்ளனர். இடப்பக்கம் வைத்து யாழை இயக்குதலே மரபாகும் என்பதனால் யாழ் இசைக்கும் கலைஞர்களைப் பற்றிக் கூறும் பொழுது, யாழினை இடப்பக்கம் வைத்தே இசைத்தனர் என்று அனைத்துப் பதிவுகளும் கூறுகிறது.

## இசையும் உளவியலும்

இசை உளவியலோடு தொடர்புடையது. இதனை "உடற் கூற்றியலின் அடிப்படையில் இசையை விளக்கவந்த ஆராய்ச்சியாளர்கள், பாலியற் தொடர்புகளுக்கான ஒலிவடிவக் குறியீடுகளில் இருந்து இசை தோன்றியதென விளக்குவர். டார்வினுடைய இந்தக் கோட்பாட்டிலே மனித உழைப்பின் முனைப்புப் புலப்படுத்தவில்லை. உழைப்பின் உள்ளார்ந்த மலர்ச்சிக்கும் இசைக்குமிடையே நேரடியான தொடர்பு உண்டு என்பதும் புலப்படுத்தப்படவில்லை. ஆனாலும் இசையில் பாலியலை முதன்மைப்படுத்துதல், இந்தியாவின் கலைப் பாரம்பரியத்திலும் காணப்படுகிறது" என்று கலாநிதி சபா. ஜெயராசா குறிப்பிடுகிறார். தலைவன், தலைவி, பரத்தையரிடையே நிகழ்ந்த கூடலிலும், ஊடலிலும் இசை இன்றியமையாத இடம் பெற்றிருந்தது. அதனை மதுரைக் காஞ்சி,

> **"................................ நாணுக் கெள**
> **ஏழ்புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ்**
> **தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து**
> **வீழ்துணைதழீஇ................" (மா.க.558-61)**

என்னும் பாடல் வரியின் மூலம் மாலை நேரத்தில் தங்கள் காதலரைக் கவர அழகாகத் தங்களை ஒப்பனை செய்து கொண்ட பெண்கள், மாலைக்காலம் நீங்கியதும் அவர்களைக் கண்டு நாணம் கொண்டு கூடிக்களிக்கும் இன்பத்தை வேண்டாதவர்களைப் போல, ஏழிசைகளையும் நன்கு உணர்ந்தவர்களாய் யாழை எடுத்து மீட்டிப்பாடினர். அவர்களுக்குள் இருந்த காம மயக்கத்தால் தன் நிலை இழந்து தங்கள் காதலரைக் கூடி இன்புற்ற பின்னும், நாணம் நீங்காதவர்களாய் இருந்தனர். இவ்வாறாக இசை என்பது காம எண்ணங்களை தோற்றுவிப்பதாகவும் உள்ளது.

## முடிவுரை

இசை பழங்கால மக்களின் வாழ்வினில் இன்றியமையாத ஒன்றாகவே இருந்தது. அதனை மையமிட்டே தொல்காப்பியர் ஐந்து வகையான நிலங்களின்கருப்பொருள்களில்

இசையையையும் வைத்துக் கூறியுள்ளார். அதில் யாழ் முக்கிய இடம் வகித்தது. அனைவரையும் கவர்ந்து இழுக்கும் விதமாக அதன் வண்ணமும் வடிவமும் இருந்தது. பாடல் புனையும் புலவர்களின் எண்ணத்தில் அக்கருவியும் அதனிலிருந்து பிறந்த இசையும் கவர்ந்து இழுத்ததன் பயனாகவே பழங்காலப் புலவர்கள் அதன் வடிவம் பற்றிய செய்தியினை இலக்கியத்தில் தெளிவாகப் படிப்பவரின் கண்முன் தெரிவது போல காட்சிப்படுத்தியுள்ளனர். மனிதனின் முயற்சியினால் பல்வேறு பொருள்கள் கொண்டு உருவாக்கப்பட்ட முதல் இசைக்கருவி யாழே. அவ்வகையில் அதன் இசைத் தன்மை மற்றும் பண் போன்றவைகளை அவ்வகையான கருவிகளைக் கொண்டு இசைத்து நம்முடைய பண்டையகால இசை முறையை மீட்டெடுப்பது
நம்முடைய கடமையாகும்.

utsmdu2@gmail.com

# உலகத்தமிழ்

உலகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் மின்னிதழ்

((((()))))